அதில் நம்முடைய மாநிலத்தின் போலீஸ் துறைக்கும், அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அவர்களே குறிப்பிட்டபடி, கல்கத்தாவிலிருந்து அவர்களுக்குத் தொடர்புள்ள ஒரு கம்பெனி சம்பந்தமாக சோதனையிடுவதற்காக Central Bureau of Investigation சி. பி. ஐ. அந்தக் காவல்துறையினர் அந்தச் சோதனையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அது, இந்த மாநிலத்தின் காவல்துறைக்குத் தெரிவித்துவிட்டுச் செய்ய வேண்டிய அவசியமில்லை. சில விஷயங்களில் மத்திய அரசுக் காவல் துறை நேரடியாகச் சோதனை செய்யலாம் என்றிருக்கிறது. எனவே அதை இந்தச் சர்க்கார் இந்த அவைககோ, வெளியிலேயோ பிரகடனப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அப்படிப்பட்ட பொறுப்பும் இந்த அரசாங்கத்திற்குக் கிடையாது. அவர்கள் கூறிய தகவல் உண்மையாக இருக்கலாம். ஆனால் இந்த அரசாங்கத்திற்கும் எந்த முதலாளிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் முதலாளிகளுக்கும் சம்பந்தமில்லை என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: இந்தச் சர்க்காருக்குத் தெரியாமல் எது வேண்டுமானாலும் நடந்துகொண்டிருக்கலாமா? அதை இந்தச் சர்க்கார் பார்த்துக்கொண்டிருப்பார்களா? அமைச்சர்களையே கைது செய்வது போன்று ஏதாவது செய்தால்கூட பார்த்துக்கொண்டிருப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மத்திய அரசுக் காவல்துறை, இப்படிப்பட்ட சில விஷயங்களில், வெளிநாட்டு அந்நிய செலாவணி போன்றவைகளில் தவறுகள் நடந்திருந்தால் அவைகளிலே தலையிட இந்தச் சர்க்காருடைய அனுமதியைப் பெறவேண்டிய அவசியமில்லாமலேயே தலையிடலாம். அந்த முறையிலே, வடநாட்டு முதலாளி என்று அவர்களுடைய வாயாலேயே வந்தது, அந்த வடநாட்டு முதலாளியிடம் சோதனையிட்டது உண்மை. அதைத்தான் சொல்லுகிறேன். ஆனால் இந்தச் சர்க்காருக்கும் அதற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. ஆகவேதான் அதை அறிவிக்கவேண்டிய பொறுப்பும், அவசியமும் இந்தச் சர்க்காருக்குக் கிடையாது. அதை அறிவிகக வேண்டியது மத்திய அரசே தவிர நாங்கள் அல்ல.

திரு. பி. ஜி. கருத்திருமன்: சபாநாயகரவர்களே...

(9) நடைமுறைக் கேள்வி.—(அ) பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெறாமல் பேரவையில் ஒரு பிரச்சினையை எழுப்பியது குறித்து.

திரு. நா. வீராசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே எதிர்கட்சித் தலைவரவர்கள் ஒரு பிரச்னையை இப்போது இங்கு எழுப்பினார்கள். அவசரமும், பொது முக்கியத்துவம் வாய்ந்ததுமான அந்தப் பிரச்னையை இப்பொழுது கேட்பதாகச் சொன்னார்கள். நம்முடைய விதி 41-ன்படி அவசரமும், பொதுமுக்கியமும் வாய்ந்த பிரச்னையை எழுப்பவேண்டுமென்றால் தங்கள் அனுமதியைப் பெற்று எழுப்ப வேண்டும், அந்த அறிக்கையை வெளியிடவேண்டும். இப்பொழுது எழுப்பப்பட்ட இந்தப் பிரச்னைக்கு எந்த விதிமுறை இடம் அளிக்கிறது என்பதையும், அது முறைதானா என்பதையும், அதற்கு அவைத் தலைவரவர்கள் தீர்ப்பு அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனி உறுப்பினர் கேள்வி என்று ஒன்றிருக்கிறது. அதுகூட, சட்டமன்ற விதிமுறைகளில் இடம் பெறவில்லை. ஆனாலும் நாம் அனுமதிக்கிறோம். தனி உறுப்பினர் கேள்வி கேட்கும் முறைக்கு சட்டமன்ற விதிமுறைகளில் இடமில்லை. அப்படிக்

கேட்கப்படும் அந்தக் கேள்விகூட, பேரவைத் தலைவருக்கு அனுப்பப் பட்டு, பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்ற பிறகுதான் அது இந்த அவைக்கு வரலாமேதவிர, அது இல்லாமல் வருவது முறை யல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனுலும் சில விளக்கங் கள் பெறுவதற்காக எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எழுந்து கூறினுர்கள். மரபைக் கையாளும் முறையில் இதை மேற்கொள்ளலாமே தவிர அதற்கும் நம்முடைய சட்டமன்ற விதிமுறைகளில் இடம் இல்லை என்பதைக் கூறிக்கொள்ளுகின்றேன்.

திரு பி. ஜி. கருத்திருமன்: May's Parliamentary Practice இல் Leader of the Oppossition--க்கு இன்னின்ன உரிமைகள் இருக்கின்றன் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய விதிமுறைகளிலே இடம் இல்லை என்றிருந்தாலும்கூட ஏதாவது சந்தர்ப்பங்களிலே....

(ஆ) விதிமுறைப்படி எழுப்பப்படாத எப்பொருளும் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறலாமா என்பது குறித்து.

திரு. ம. பொ. சிவஞானம்: தலைவரவர்களே, ஒரு ஒழுங்குக் கேள்வியை எழுப்ப விரும்புகிறேன். தாங்கள் அளித்த தீர்ப்பில் எந்த விதிப்படியும் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கிளப்பிய வினு அமைய வில்லை. அப்படி எழுப்ப முறையுமில்லை என்ற தீர்ப்பளித்திருப்பதால், இது சம்பந்தமான எந்த விஷயமும் இந்தச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறலாமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: அவர்களுக்கே, ஏனென்ருல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு உறுப்பினர் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினுல் அதற்குத் தீர்ப்பளிக்கவேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவருக்குத்தான் இருக்கிறது. எழுப்பலாமா, எழுப்பக் கூடாதா என்று உறுப்பினர் வினவுவதற்கு இடம் இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன்: Mays Parliamentary Practice –இலே Leader of the Opposition என்ருல் சில சமயங்களிலே, அபூர்வ மான சந்தர்ப்பங்களிலே தகவல் கேட்பதற்கு உரிமையிருக்கிறது, மரபும் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தெரியாமல் இருந்தால்தான் ஞாபகப்படுத்த வேண்டும். எழுந்திருக்க அனுமதி இருக்கிறது என்ற மரபு தெரிந்திருப்பதால்தான் பேரவையில் தாங்கள் கூறுவதற்கு அனுமதித்திருக்கிறது. எனவே எனக்கு நினைவூட்டத் தேவையில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: ஆனுல் எதிர்க்கட்சித் தலைவ ரவர்கள், இந்த விஷயத்தை, எந்த விஷயத்தைப்பற்றியும், அவர் சொன்னதுபோல் அபூர்வமான சந்தர்ப்பங்களிலே, சில தகவல்களை அறிந்துகொள்ளும் வகையில் அந்தக் கருத்துக்களைச் சொல்லவேண்டுமே தவிர, இதை இந்த அரசாங்கம் மறுக்கிறதா? இந்த அரசாங்கத் திற்கும் அவர்களுக்கும் தொடர்பிருக்கிறதா, மர்மம் இருக்கிறதா என்று இப்படிப்பட்ட நிலையிலே அவர்கள் பிரச்னைகளைக் கிளப்பாமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: இப்படிக் கேட்பதின்மூலம், சர்க்கா ரின் பரிசுத்தத் தன்மையை வெளிப்படுத்துகிறேன்.